# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

## RTR OP. No.85/2025

## Deposition of witness : PW 1

| | | | |
|---|---|---|---|
| Name : | ஜமுனா | Caste | – |
| W/o. | குன்றக்குமரன் | Calling: | |
| Village: | பேலஸ் நகர் | Religion: | |
| Taluk : | சேலம் | Age : | 50 |

Solemnly affirmed on 13.08.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்).

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது பேலஸ் நகர் Housing Society–ன் செயலாளராக 2021 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறேன். அந்த சொசைட்டியின் கட்டிடமானது பேலஸ் தியேட்டர் பக்கத்தில் செரி ரோட்டில் அமைந்துள்ளது. எல்.ஐ.சி எம்பாலியிஸ் ஹவுஸிங் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி என்ற பெயரில் இயங்கி வந்தது. பேலஸ் ஹவுசிங் பேலஸ் நகர் சொசைட்டி என்ற பெயருக்கு பைலா மூலமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த கட்டிடத்திற்கு சேலம் மாநகராட்சியில் வரி விதிப்பு உள்ளது. பேலஸ் நகர் கூட்டுறவு சொசைட்டி என்ற பெயரில்தான் இன்றைய தேதி

வரை வரிவிதிப்பு நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பு எல்ஐசி எம்பிலாயீஸ் ஹவுஸிங் கோ ஆபிரடிவ் சொசைட்டி என்ற பெயரில் வரிவிதிப்பு நடைபெற்று வந்தது. இரண்டு வரி விதிப்பு தொடர்பான ஆவணங்களோ என் வசம் உள்ளது. என்னால் நீதிமன்றத்தில் அந்த வரி விதிப்பு ஆவணங்களை ஆஜர் செய்ய முடியும்.

**3.** மொத்தம் 26 நபர்கள் இந்த ஹவுசிங் சொசைட்டியில் உறுப்பினர்களாக உள்ளார்கள். வருடா வருடம் எங்கள் ஹவுசிங் சொசைட்டிக்கு கணக்குகள் தாக்கல் செய்வோம். மொத்தம் எங்கள் இடத்தில் இருந்து 6530 சதுர அடி ஆர்ஜிதம் மூலமாக எதிர்மனுதாரர்கள் கைப்பற்றி உள்ளார்கள். 2021 ஆம் ஆண்டு ஆர்ஜிதத்தின் பொழுது இவ்வாறு நிலம் எடுக்கப்பட்ட விபரம் எங்கள் ஹவுசிங் சொசைட்டியின் ஆண்டு கணக்கில் நாங்கள் காட்டி இருப்போம் என்றால், சரிதான். இது சம்பந்தமாக நாங்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம் அந்த தீர்மான நகலை என்னால் ஆஜர் செய்ய முடியும்.

**4.** பி. சண்முக சுந்தரம் என்பவர் பத்திர எண்.1027/1999–ன் கீழ் கோருநர் கூட்டுறவு சங்கத்திற்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம். சான்றிட்ட நகல். **Ex.P.1.** கோருநர் சங்கத்தின் பெயர் மாற்றத்தை காட்டும் துணை விதி. உண்மை நகல் **Ex.P.2.** சேலம் மாநகராட்சி உதவி ஆணையரின் புதிதாக மாற்றப்பட்ட T.S.எண்கள் குறித்து அனுப்பிய பதில் கடிதம். உண்மை நகல் **Ex.P.3**. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் TLSR. சான்றிட்ட நகல் **Ex.P.4.** ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கான வில்லங்கச் சான்றிதழ். பதிவிறக்கப்பட்ட நகல் **Ex.P.5.** கோருநர் சங்கத்தின் வங்கி கணக்குப்

புத்தகம் **Ex.P.6**. கோருநர் சங்கத்தின் பான் அட்டை **Ex.P.7**. கோருநர் சங்கத்தின் செயலாளரின் அடையாள அட்டை **Ex.P.8**. கோருநர் சங்கத்தின் செயலாளரின் ஆதார் அட்டை **Ex.P.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.08.13 16:51:35 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

சேலம்